முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1350

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.06.2023, சனிக்கிழமை

1. ஞானவேலி கொண்ட அரங்கனே
ஞானபலம் கொண்ட தேசிகனே
தானதர்ம சக்தியோடு கலியினில்
தரணியையே மாற்ற அற்புதம் நடத்துகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யான்
வரமென ஞானஅறிவுரை ஆசி வழங்குவேன்
சோபகிருது விடைதிங்கள் தன்னில்

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 27ம் நாள், 10.06.2023, சனிக்கிழமை)

3. தன்னிலே அரங்கனால்தான் இந்த உலகுக்கு மாற்றம்
தர்மத்தைக் கொண்டு நடக்கக்கூடும்
அண்ணலாக வந்த அரங்கன் தயவால்தான்
அகிலத்தார்க்கு பிறவாப்பேறு எளிதில் கிட்டநேரும்
4. நேர்மை கொண்டு ஓங்காரக்குடில் நோக்கி
நிலவுலகோர் ஞானம் பயில வந்தால்
வறுமை விலகும் அந்தப் பிறவி நோக்கம் உணர்த்தப்படும்
வையகத்தில் வாழும்காலமே ஞானிகளாகவும் அங்கீகாரம்
உருவாக்கப்படும்
5. ஆகவே உலகோர் அரங்கன் தொடர்பு கூட்டி
ஆற்றல் மிக்க சுத்தசைவ நெறிஏற்று
ஜெகத்தினில் எங்கும் ஜீவதயவு பரவும் வண்ணம்
சித்திமிகு தர்மத்தை கையில் எடுத்து செய்துவர
6. வருகவே வையகம் வளர்ச்சி காணும்
வருகவே வையகம் ஞானவழிகளில்
தர்மபலத்தைக் கொண்டே மாற்றம்
தக்கபடி சடுதி காணக்கூடும்

7. கூடவே அற்புதம் நடத்த உலகோர்
குருவாக அரங்கனை ஏற்று நாடி வர வேண்டும்
சடுதி ஞானிகள் நிறைந்த
ஞானசபையாம் பிரணவக் குடிலில்

8. குடிலில் சரணாகதி கொண்டு
குருபரனைக் காண உலகோர்
குருபரன் எனைக் காண உலகோர்
நாடிவர உலகமெங்கும் மாற்றம் ஞானதேசிகனால் நடந்தேறும்
ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–